10

113

33

**சுற்றறிக்கை இல : 4/2002**

எனது இல : என்சபி/ சிஓ/ திட் /பொது /02
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
திருகோணமலை.
25.09.2002

தலைவர் பொது முகாமையாளர்,
சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும்,
ஏனைய பாரிய 2ம் படிச் கூட்டுறவுச் சங்கங்களுக்கும்

**<u>பொருட் கொள்வனவு</u>**

மேற்படி விடயம் தொடர்பான எனது சமஇலக்கமும் 04.06.1998ந் திகதியும் கொண்ட 4/98 இலக்க சுற்றறிக்கைக்கு மேலதிகமாக இச் சுற்றறிக்கை என்னால் வெளியிடப்படுகின்றது.

எனது மேற்குறித்த 4/98 இலக்க சுற்றறிக்கையின் பின்னரும் ப.நோ.கூ.சங்கங்கள் சுற்றறிக்கைக்கு அமைவாக தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதால் பல சங்கங்களில் பொருட் கொள்வனவு சம்பந்தமான ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளமை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.இவ்வாறான ஒழுங்கீனங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் நற்பெயருக்கும் செயற்பாடுகளுக்கும் பாதிமாக அமைந்து விடுகின்றன. இந்நிலைமை தொடர்வதை கூட்டுறவத் திணைக்களம் அனுமதிக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, இது சம்பந்தப்பட்ட மட்டில் சில உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள திணைக்களம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. எனவே, குறித்த சுற்றறிக்கைக்கு மேலதிகமாக கீழ்க்காணும் விடயங்களையும் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

பதிவு செய்யப்பட்ட மொத்த வியாபாரிகள் அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்தே பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். இந்நிறுவனங்களிடமிருந்து முறையான விற்பனைச் சிட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் "உறுதி செய்யப்பட வேண்டியவை" (On Approval) என்ற பதத்தைக் கொண்ட விற்பனைச் சிட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படலாகாது. இவ்வாறே சங்கத்திற்கு பொருள் விநியோகிப்பவரின் கடிதத் தலைப்பினை சங்கத்தின் கொள்வனவு ஆவணமாக பயன்படுத்தல் கூடாது. முறையான கொள்வனவுச் சிட்டையின்றி கொள்வனவை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களும் அதனுடைய உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்ட பொருள் விநியோகிப்பவரின் வரிச் செலுத்துகையை மறைப்பதற்கு உடந்தையாக இருந்த குற்றத்தை புரிந்தவராகக் கருதப்படுவர். இத்துடன் இது சம்பந்தமாக உரிய திணைக்களத்திற்கு எம்மால் தகவல்கள் வழங்கப்படும்.

பொருட் கொள்வனவுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு யாவும் உரிய நிறுவனத்தின் பெயரில் அல்லது அந்நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் பெயர் குறித்துரைக்கப்பட்ட ஒருவரின் பெயரில் மட்டுமே வழங்கப்படல் வேண்டும். மேலும் இத்தகைய கொடுப்பனவுக்கான காசோலைகள் யாவும் சங்கத்தின் காசாளரிடம் மாற்றப்படக் கூடாது.

முறையாக மேற்கொள்ளப்படாத கொள்வனவுகளும் அவற்றிற்கான கொடுப்பனவுகளும் அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவாக் கருதி, இவ் ஒழுங்கீனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிராக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆ.சுப்பிரமணியசர்மா**
**கூ.அ.ஆணையாளரும்**
**கூ.ச.பதிவாளரும் (வகிமா)**

பிரதிகள் : 1. கூ.அ.உ.ஆணையாளர் (அபிவிருத்தி) - மேற்படிவிடயம் சம்பந்தமாக உரிய கவனம் செலுத்தி மாதாந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்கு

2. கூ.அ.உ.ஆணையாளர்(கணக்காய்வு) - கணக்காய்வின்போது இது சம்பந்தமான ஒழுங்கீனங்கள் காணப்படுமிடத்து எனது கவனத்திற்கு கொண்டு வருதலுக்காக

3. செயலாளர், ப.நோ.கூ.சங்கம் - இச்சுற்றுநிருபத்தை இயக்குநர் சபைக்கு சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காக